அந்த அமைச்சர் மௌரியா என்பவர்; அந்த அமைச்சர் எப்படி இந்த இலாக்காவை நடத்தப்போகிறுர், எதிர்காலத்தில் எப்படி நெசவாளர்களைப் பாதுகாக்கப்போகிறுர் என்ற பயம் எனக்கு இருக்கிறது. நண்பர் சுரேந்திரன் அவர்கள்தான் கை கொடுக்கவேண்டும்.

சத்திரப்பட்டியில் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்.

*345 வினு—திரு. ச. சுப்பு : மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், சத்திரப்பட்டியில் "வீரபாண்டிய கட்டபொம்மன்" நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் அமைக்குமாறு கோரி அரசுக்கு விண்ணப்பம் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன்மீது என்ன நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) வீரபாண்டிய கட்டபொம்மன் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் அமைக்க மதுரையிலுள்ள இராமநாதபுரம் உதவி கைத்தறி இயக்குநருக்கு விண்ணப்பம் வந்தது.

(இ) சங்கம் பதிவு செய்வதற்கு முன்னுல் இராமநாதபுரம் மாவட்ட கூட்டுறவு மத்திய வங்கியின் ஒப்புதல் கோரி உதவி இயக்குநர் எழுதியுள்ளார்.

Drinking Water Supply for Puthukadai area.

*** 346 Q.**—THIRU R. PONNAPPA NADAR: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether there is any proposal to provide drinking water facilities to the Puthukadai Town Panchayat in Munchirai Union, Vilavancode taluk ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (அ) ஆம்.

(இ) புதுக்கடை, முஞ்சிரை, பார்த்திவபுரம் மற்றும் ஆழங்குளம் ஊராட்சிகளுக்குக் குடிநீர் வழங்க வேண்டி ஆய்வு வேலைகள் செய்யும் பொருட்டு ரூ. 10,800-க்கு ஆய்வு மதிப்பீடு ஒன்றினுக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் 17-6-1974-ல் ஒப்புதல் அளித்துள்ளது. மேற்கூறிய ஊராட்சிகள் தமது விகிதாச்சார ஆய்வுத் தொகையினை கடந்த ஆண்டு அக்டோபரில்தான் கட்டியுள்ளன. எனவே, ஆய்வு வேலைகளை விரைவில் தொடங்கி முடித்து திட்ட மதிப்பீடு தயாரித்து அனுப்பிவைக்குமாறு தலைமைப் பொறியாளருக்கு குடிநீர் வடிகால் வாரியம் உத்தரவிட்டுள்ளது.